DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARIAPATTI

Calender Miscellaneous **CC.No. 268/2024**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

Name : நரசிங்கராஜ் (சார்பு ஆய்வாளர்) ((Pw.10)
Father/Husband Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 8th day Januray of 2025

(எதிரி ஆஜரில்லை )

**முதல் விசாரணை:–**

நான் தற்போது காவல் துறையில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று அருப்புக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். நான் மல்லாங்கிணர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த போது கடந்த 19.02.2016 ம் தேதி சுமார் மாலை 18.00 மணிக்கு விருதுநகர் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்க பெற்ற தகவலை பெற்று நான் விருதுநகர் அரசு மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையிலிருந்த சிவபாலன் மனைவி பிரியா என்பவரை விசாரித்து எழுத்து மூலமான புகாரை 19.30 மணிக்கு பெற்று நிலையம் வந்து 20.30 மணிக்கு புகாரின் தன்மைகேற்ப காவல் நிலைய குற்ற எண்.28/16 பிரிவுகள் 279, 337, 304(எ) இதச வாக வழக்கு பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அசா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. புகார் மனுவையும் முதல் தகவல் அறிக்கையையும் கனம் விருதுநகர் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண்.1 அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். மற்ற நகல்களை உயர்

அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்து மேல்விசாணைக்காக வழக்கு கோப்பினை காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். ஆய்வாளர் வழக்கு சம்பந்தமாக என்னை விசாரித்தார்.

**எ.த.கு.வி:–**

1. புகார் வாக்குமூலத்தை எத்தனை மணிக்கு வாங்கினேன் என்றால் 19.30 மணிக்கு வாங்கினேன். தகவல் எப்போது கிடைத்தது என்றால் 18.00 மணிக்கு கிடைத்தது. புகார்தாரர் புகாரை எழுத்து மூலமாக எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். புகார்தாரர் புகார் வாக்குமூலத்தில் கையெழுத்து செய்து தேதி குறிப்பிடப்படவில்லையென்றால் சரிதான். புகார்தாரர் பிரியா அனுப்புநர் என்ற இடத்தில் சி.பிரியா என்று குறிப்பிட்டுள்ளார் ஆனால் கையொப்பம் செய்ததில் ஆங்கிலத்தில் G.பிரியா என்று கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் விபத்து நடந்த வாகனத்தின் ஓட்டுநர் பெயர் அவரது தகப்பனார் பெயர் பற்றி குறிப்பிடப்படவில்லையென்றால் சரியல்ல.

2. புகார் மனுவில் எதிரி அதிவேகமாகவும்,அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லையென்றால் சரியல்ல. தகவல் கிடைத்தவுடன் காவல் நிலையத்திலிருந்து மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் மாலை 19.30 மணிக்கு சென்றேன். மருத்துவமனைக்கு சென்று யார் யாரை விசாரித்தீர்கள் என்றால் புகார்தாரர் பிரியாவை மட்டும் விசாரித்தேன். மல்லாங்கிணர் காவல்நிலையத்திலிருந்து விருதுநகர் மருத்துவமனைக்கு சுமார் 10 கி.மீ இருக்கலாம் என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தில் சென்றால் ஒரு 1/4 நேரத்தில் செல்லாமா என்றால் 1/2 மணி நேரம் ஆகும். புகார் மனுவில் புகார்தாரரின் குடும்பம் காலையில் மாரியம்மன் கோவிலுக்கு சென்றதாக குறிப்பிட்டுள்ளனர் ஆனால் எத்தனை மணிக்கு சென்றனர் என்று கூறவில்லையென்றால் சரிதான். இருசக்கர வாகனம் என்ன கலர் என்று புகார் மனுவில் சொல்லவில்லையென்றால் சரிதான். மல்லாங்கிணரிலிருந்து திருச்சுழி சுமார் 40 கி.மீ இருக்குமா என்றால் சரியாக தெரியவில்லை.

3. திருச்சுழியிலிருந்து மல்லாங்கிணர் சம்பவ இடத்திற்கு வருவதற்கு சுமார் 1 மணி நேரம் ஆகும் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் காலம் 13 ல் புகார்தாரருக்கு இலவசமாக நகல் கொடுக்கப்பட்டு கையொப்பம் பெறவேண்டும் அவ்வாறு பெறவில்லையென்றால் சரிதான். காலம் 15 ல் நீதிமன்றத்திற்கு முதல் தகவல் அறிக்கை நகல் அனுப்பட்ட நாள் மற்றும் நேரம் குறிப்பிட்ட இருக்க வேண்டும் ஆனால் அவ்வாறு இல்லையென்றால் சரிதான். சம்பவம் நடந்த தேதி 19.02.2016 என்று உள்ளது ஆனால் நீதிமன்றத்திற்கு முதல் தகவல்அறிக்கை 24.02.2016 ம் தேதி அனுப்பட்டது என்றால் சரிதான். 5 நாட்கள் காலதாமத்திற்கு காரணம் கூறியுள்ளேனா என்றால் சரிதான். வழக்கிற்கு பின்னிட்டு முதல் அறிக்கை அறிக்கை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தது என்றால் சரியல்ல. நான் எனது வாக்குமூலத்தில் சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லையென்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லையென்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:—**

இல்லை